[1996 ஆகஸ்ட் 21

கேட்டிருக்கிறார்கள். அதுசம்பந்தமாக எப்படித் திட்டமிடப்பட வேண்டுமென்று திட்ட மதிப்பீடுகள் பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் மூலமாகக் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களும் தர்மபுரி செயற் பொறியாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கருத்துருக்களை அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் அனுப்பபிவைக்கப்பட்ட பிறகு அவற்றின் மீது பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் பி.: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுப்பிரமணிய சிவா அவர்கள் வத்தலகுண்டில் பிறந்தவர்கள். வத்தலகுண்டில் பிறந்த அவருடைய வீடு இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கிறது. எனவே அந்த வீட்டை அரசே எடுத்து அவருடைய நினைவுச் சின்னமாக மாற்றுவதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தியாகிகள் அத்தனை பேரையும் இந்த அரசாங்கம் மிகவும் மரியாதையோடு மதிக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். தியாகிகளின் நினைவுச் சின்னம் அமைப்பதோடு, அந்தத் தியாகிகளினுடைய உணர்வுகளை எல்லாம் பிரதிபலிக்கிற தலைவராக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கிற காரணத்தால் கடந்த காலங்களிலே உருவாக்கப்பட்ட தியாகிகளினுடைய நினைவுச் சின்னங்களை எல்லாம் செம்மைப்படுத்திவிட்டு, எதிர்காலத்தில் அந்தப் பணிகளை எல்லாம் நிறைவேற்றலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 199, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

199—

கோயில் இடங்களை ஏல முறையில் வாடகைக்கு விடுதல்

*** 3077—திரு. ப. கோவிந்தன் :**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1996 ஆகஸ்ட் 21]

சேலம் மாவட்டம், தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் கோயிலுக்குச் சொந்தமான இடங்களைப் பொது ஏல முறையில் வாடகைக்குவிட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமான நஞ்சை புஞ்சை நிலங்கள் மற்றும் கடைகள் ஏற்கனவே பொது ஏலத்தில் விடப்பட்டுள்ளன. இவை தவிர இத்திருக்கோயிலுக்குப் பின்புறத்தில் கோயிலுக்குச் சொந்தமாக 1200 சதுர அடி காலியாக உள்ள நிலத்தை சில நடைமுறை மற்றும் நிர்வாகக் காரணங்களினால் பொது ஏலத்தில் விட இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. கோவிந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் கோயிலுக்குச் சொந்தமான இடங்களை சுமார் 20, 25 ஆண்டுகளுக்கு முன் குறைந்தபட்சமாக ரூ.20, ரூ. 30 என்ற வாடகைக்கு அடிநிலங்கள் விடப்பட்டிருக்கின்றன. தற்போது அந்த இடங்கள் மாதம் ஒன்றுக்கு ரூ.1500-லிருந்து ரூ.2000/- வரை வாடகைக்குப் போகக்கூடிய இடங்களாக இருக்கின்ற காரணத்தால் அந்த இடத்தைப் பொது ஏலத்திற்கு விடாமல் வருடம் ஒன்றுக்கு 10 சதவீதம் முன்பிருந்த வாடகையைவிட உயர்த்தி வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். தற்போது அரசு பொது ஏலத்திற்கு விட்டால் அறநிலையத் துறைக்குச் சொந்தமான அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவிலுக்கு ஆண்டு ஒன்றுக்கு 10 முதல் 15 லட்சம் அதிகமான வருமானம் வரும் ....

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ப. கோவிந்தன்: கொஞ்சம் விளக்கமாக சொன்னால்தான் ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, விளக்கம் அவர் சொல்ல வேண்டும். நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ப. கோவிந்தன்: அதனால், அதை அரசு பொது ஏலத்தில் விட உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம்

TRUTH ALONE TRIUMPHS

[1996 ஆகஸ்ட் 21

அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவில், தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறை சட்டப்பிரிவு 46 உட்பிரிவு 1-ன் கீழ் அறிவிப்புச் செய்யப்பட்டு பட்டியலில் சேர்ந்த திருக்கோவில் ஆகும். இந்தத் திருக்கோவில் மூன்றாம் நிலை செயல் அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோவிலுக்குச் சொந்தமான தாரமங்கலத்தில், திருக்கோவிலின் பின்புறத்தில் தெப்பக் குளத்தையொட்டியுள்ள வடக்கு மற்றும் மேற்குப்புறத்தில் சர்வே எண் 173/1-ல், 10 அடி அகலம், 120 அடி நீளம் என்ற அளவிலான மொத்தம் 1,200 சதுர அடி பரப்பளவிலான நிலம் உள்ளது. இக்காலியிடத்திற்கு வெகு அருகாமையில் ஊராட்சி ஒன்றியப் பேருந்து நிலையம் இயங்கி வருகிறது. இக்காலியிடம் தொடர்ந்து காலியாகவே இருந்து வருகிறது. இக்காலியிடத்தினைப் பொது ஏலத்தில் வாடகைக்கு விடுவது என்பதும் அல்லது அவ்விடத்தில் கடைகளைக் கட்டி வாடகைக்கு விடுவது என்பதும் பின்வரும் காரணங்களால் இயலாததாகும். காரணம் (1) இத்திருக்கோவில் தெப்பக்குளத்தில் உற்சவம் நடத்த நிர்வாகிகளாலும் , ஊர் பொதுமக்களாலும் உத்தேசிக்கப்பட்டு, அவ்வமயம் பொது மக்கள் வசதியாக நின்றுகொண்டு பார்வையிட வசதியாகவே, மேற்படி காலியிடம் பயன்படுத்தப்பட உள்ளது. காரணம் (2), மேற்படி தெப்பக்குளத்தை ஒட்டியுள்ள வடக்கு மற்றும் மேற்குப்புறத்தில் கடைகளோ, கட்டிடங்களோ கட்டுவதால் தெப்பக்குளம் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டுவிடும் நிலை ஏற்படுகிறது. காரணம் (3), திருக்கோவில் தெப்பக்குளத்தை ஒட்டியுள்ள வடக்குப்புற காலியிடத்தை ஒட்டி ஊராட்சி ஒன்றியப் பேருந்து நிலையம் இயங்கி வருவதாலும், மேற்குப்புற காலியிடத்தை ஒட்டி தாரமங்கலம் மெயின் வீதி மிகக் குறுகலாக அமைந்திருப்பதாலும், மேற்குறிப்பிட்ட காலியிடத்தை வாடகைக்கு விடவோ, அல்லது கடைகள் கட்டிப் பயன்படுத்தவோ முடியாமல் நெருக்கடி ஏற்படும் என்பதாலும், இந்தக் காலியிடத்தை வாடகைக்கு விட்டால் தெப்பக் குளத்தின் சுற்றுச்சூழல் வெகுவாகப் பாதிக்கப்பட்டு, சுகாதாரக் கேடு தோன்றுவதற்கு வழிவகுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 10 சதவீதம் உயர்த்தி பல்வேறு இடங்களிலே கொடுத்துவருவதாகச் சொன்னார்கள். அது கடந்த ஆட்சிக் காலத்திலே நடைபெற்றிருந்தது. அது தற்போது மாற்றப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 200, மாண்புமிகு திரு. ச. அழகிரி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.